பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி21 சனிக்கிழமை (06.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :253

# மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்கும் நெருக்கடியில் புலிகளின் தலைமை!

## நோர்வே அனுசரணையாளர்களிடம் விடுதலைப் புலிகள் விரிவாக விளக்கம்

கிளிநொச்சி,ஓக.6

தமிழ் மக்கள் பொறுமை இழந்து வருகிறார்கள். சமாதான முன்னெடுப்புகள் மீதான நம்பிக்கையை இழந்தவர்களாக அவர்கள் எமது தலைமைப்பீடத்திற்கு பல்வேறு நெருக்குவாரங்களைக் கொடுக்கிறார்கள். மக்களுக்கு மதிப்பளிக்க வேண்டிய நெருக்கடி நிலையில் எமது தலைமைப்பீடம் இருக்கிறது. இந்த நிலைமையை நாம் நோர்வே அனுசரணையாளர்களுக்கு விரிவாக விளக்கியுள்ளோம்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

சமாதான முயற்சிகளுக்கான நோர்வே அனுசரணையாளரான அந்நாட்டு பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் கிளிநொச்சியில் நேற்று அவரைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே தமிழ்ச் செல்வன் இப்படிக் கூறினார்.

''எமது தமிழ்மக்கள் பொறுமை இழந்து வருகிறார்கள். சமாதான முன்னெடுப்புகள் மீதான நம்பிக்கையை இழந்தவர்களாக எமது தலைமைப்பீடத்திற்கு பல்வேறு நெருக்குவாரங்களைக் கொடுத்துவருகிறார்கள்.''- என்பதை நோர்வே தூதுவர் குழுவினருக்கு இந்த சந்திப்பின்போது நன்கு விளக்கிக் கூறினோம் என்று தமிழ்ச்செல்வன் இந்தச் சந்திப்புப் பற்றி கேட்டபோது சொன்னார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# பதற்ற நிலையைத் தணிக்க புலிகள் - படையினர் சந்திப்பு

## பொறுமைகாக்குமாறு அனைத்து தரப்பினர்களுக்கும் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்6

இணுவில் பகுதியில் அப்பாவி இளைஞர் ஒருவர் உயிரிழக்கக் காரணமான படையினரின் சூட்டுச் சம்பவம் மற்றும் அதன் எதிரொலியாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் அடித்துக் கொன்று போடப்பட்டமை ஆகிய சம்பவங்களால் குடாநாட்டில் எழுந்திருக்கும் பதற்றமும் பீதியுமான சூழ்நிலையைத் தணிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டிருக்கின்றது.

இராணுவ அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் ஆகிய மூன்று தரப்பினரும் நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் முன்னிலையில் கூடி இது விடயமாகக் கலந்துரையாடியிருக்கின்றனர்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்றுமாலை 5மணிமுதல் சுமார் 3 மணி நேரம் இடம்பெற்ற சந்திப்பில் இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பினரின் கருத்துக்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்பட்டன.

படையினர் சார்பில் யாழ்.மாவட்ட படைகளின் தளபதி சுனில் தென்னக்கோன் அங்கு கருத்துவெளியிட்டார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தற்போதைய நிலைமை குறித்து விளக்கினார். (08ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களின் சீற்றம் வெறுப்புணர்வின் வெளிப்பாடு

### நிலைமையைத் தெளிவுபடுத்துகிறார் இளம்பரிதி

யாழ்ப்பாணம்,ஓக.6

இணுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது போன்ற துர்ப்பாக்கிய நிலைமைகள் இடம்பெறாதிருக்கவேண்டுமாயின் மக்களைப் பாதிக்காமல் இருக்கும் சூழலை சம்பந்தப்பட்டவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

படையினரின் நடவடிக்கைகளால் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்ட சீற்றமே அவர்களின் வெறுப்புணர்வின் வெளிப்பாடாக நடைபெற்று முடிந்திருக்கிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று மாலை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற படையினர் - யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு - விடுதலைப் புலிகள் ஆகிய முத்தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பினை அடுத்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## சட்டம், ஒழுங்கை பொதுமக்கள் தம் கையில் எடுத்துவிடமுடியாது!

### யாழ். படைகளின் தளபதி கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஓக.6

அமைதி நிலைமை பேணப்படவேண்டுமாயின் பொதுமக்கள் சட்டத்தைத் தம் கைகளில் எடுக்காமல் இருக்கவேண்டும் - இப்படிக் கருத்துத் தெரிவித்தார். யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன்.

இணுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஆராய்வதற்காக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பினை அடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே சுனில் தென்னக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் குடாநாடு நேற்று முடங்கியது

யாழ்ப்பாணம்,ஓக.6

இணுவிலில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் பொலீஸ் அத்தியட்சகர் கடத்திக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் ஆகியவற்றைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் குடாநாடு நேற்று செயலிழந்தது. நண்பகல் 12.30 மணியளவில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது. எனினும், வழமைநிலை திரும்பவில்லை.

காலையில் மக்கள் நடமாட்டம் ஓரளவு

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அலுவலகம் மீது பட்டிருப்பில் குண்டுத் தாக்கு!

### அடுத்தடுத்து 5 கிரனேட்டுகள் வெடித்தன



ஏறாவூர், ஓக.6

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறை பணிமனை மீது நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல்களினால் அலுவலகத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளபோதிலும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவருக்கும் காயங்களோ, உயிரிழப்புகளோ ஏற்படவில்லை என்று களுவாஞ்சிக்குடிப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் முறைப்பாடு செய்துள்ளனர். தமது அலுவலகத்தின் மீது வெள்ளிக்கிழமை காலை 5.30 மணியளவில் தொடர்ச்சியாக ஐந்து குண்டுகள் (08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பொலீஸ் நிலையத்துக்கு செல்லும் வீதிகள் மூடப்பட்டன!

### சிவில் பணிகள் நேற்றுமுதல் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ்.பொலீஸ் நிலையத்துக்குச் செல்லும் சகல வீதிகளும் நேற்று முட்கம்பிச் சுருள்கள் போடப்பட்டு மூடப்பட்டிருந்தன. யாழ். பொலீஸ் நிலையத்தின் சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இணுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலவரத்தில் யாழ். பொலீஸ் நிலைய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன கடத்தப்பட்டு பின்னர் தாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டமை தெரிந்ததே.

இச்சம்பவத்தையடுத்தே பொலீஸாரின் பாதுகாப்புக்கருதி யாழ். பொலீஸ் நிலையத்தின் சிவில் நிர்வாகச் செயற்பாடுகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### துப்பாக்கிச் சூடுபட்டு நண்பன் சாய்ந்தான்

# வாகனம் கொண்டுவருவதாகக் கூறிய படையினர் மீண்டும் வரவேயில்லை!

## இணுவில் சம்பவத்தில் காயமடைந்தவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.6

படை அதிகாரிக்கு முடிவெட்டிக் கொண்டு இருந்த எனது நண்பன் துப்பாக்கிச் சூடுபட்டுச் சாய்ந்தான். அப்போது அங்கு நின்ற படையினர் ''காயப்பட்டவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல வாகனத்துடன் வருகிறோம்'' என்று கூறிவிட்டு ஓட்டம் பிடித்தார்கள்.

- இப்படி இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகலில் இடம்பெற்ற சம்பவத்தை விவரித்தார் சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த கே.லோகதாஸ்(வயது 24).

இணுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினரின் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் இந்த இளைஞர் சம்பவம் குறித்து 'உதயன்' செய்தியாளரிடம் மேலும் கூறியதாவது:-

நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணி இருக்கும் சில படையினர் எமது கடைக்கு வந்தார்கள். அவர்களில் சிலர் வெளியே நின்றிருந்தனர். உள்ளே இரண்டு படையினர் வந்தார்கள். அவர்களுக்கு நானும் எனது நண்பனும் (உயிரிழந்தவர்) முடிதிருத்திக்கொண்டிருந்தோம். திடீரென சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

எனது நண்பர் துப்பாக்கிச் சூடுபட்டு விழுந்தார். எனக்கும் நெஞ்சுப் பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது. அப்போது வெளியே நின்றிருந்த படையினர் உள்ளே ஓடி வந்தனர். காயப்பட்டவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல வாகனம் கொண்டுவருகிறோம் எனக் கூறிவிட்டு அங்கிருந்து ஓடினர். ஆனால், படையினர் திரும்பிவரவில்லை.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு ஓடி வந்தபொதுமக்கள் எங்கள் இருவரையும் வைத்தியசாலையில் சேர்த்தார்கள். - இப்படி கே.லோகதாஸ் தெரிவித்தார்.

## சின்னமடு மாதா ஆலயப் பெருவிழாவில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஓக.6

யாத்திரத் தலங்களில் ஒன்றான ஊர்காவற்றுறை சின்னமடு மாதா தேவாலயத்தின் வருடாந்தப் பெருவிழா நேற்றுக்காலை சிறப்புற நடைபெற்றது. ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் நேற்றைய ஆராதனைகளில் பங்கு கொண்டனர்.

கத்தோலிக்க, இந்து யாத்திரிகர்கள் நேற்றைய வழிபாடுகளில் பங்குகொண்டமை சிறப்பம்சமாக இருந்தது.

தீவுப் பகுதியின் அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த யாத்திரிகர்களும் நேற்று முன்தினம் தேவாலயத்துக்கு வந்துசேர்ந்த யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த யாத்திரிகர்களும் நேற்றைய திருப்பலியிலும் திருச்சொரூப பவனியிலும் பங்கு கொண் டனர்.

யாத்திரிகர்களுக்கான அடிப்படை வசதிகள் அனைத்தும் வழமைபோன்று செய்யப்பட்டிருந்தன. இலங்கை முதலுதவிச் சங்கம், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மற்றும் சாரணர்கள் யாத்திரிகர்களின் போக்குவரத்து ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரும் ஊர்காவற்றுறை சிற்றூர்த்திச் சேவைச் சங்கத்தினரும் யாத்திரிகர்களுக்கான போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபட்டனர்.

பெருவிழாவின் இறுதியில் யாத்திரிகர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்த அனைவருக்கும் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க. ஸ்ரீமோகனன் நன்றி தெரிவித்தார். (எ)

## நெல்லியடி ம.வியில் இன்று பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஓக.6

நேற்றையதினம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவிருந்த ஆசிரியர்களுக்கான கட்புல செவிப்புல சாதனங்கள் பயிற்சி ஒத்திவைக்கப்பட்டு, இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும் என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## இணுவில் கொலைகள் குறித்த முழு விசாரணைக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஓக.6

யாழ்ப்பாணம் இணுவிலில் தமிழ் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் பொலீஸ் அதிகாரி கடத்திக் கொல்லப்பட்ட சம்பவம் என்பன தொடர்பாக முழு அளவிலான விசாரணை ஒன்றை மேற்கொண்டு, சூத்திரதாரிகளை இனங்கண்டு தாமதமின்றி சட்டத்தின் முன்நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தமிழ் இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு ஜனாதிபதி தனது கடும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும்படி படைகளின் பிரதம அதிகாரியான தயா சந்தகிரியிடம் ஜனாதிபதி நேற்றுமுன்தினம் தெரிவித்தார் என்று ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு பூரண நஷ்டஈடு வழங்கப்படும் எனவும், கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரிக்கு மரணத்திற்குப் பின்னான பதவியுயர்வு வழங்கப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

மக்களைத் தூண்டிவிடும் இச்செயல்களுக்கு மத்தியில் படையினரை அமைதியுடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளுமாறும் ஜனாதிபதி கேட்டுள்ளார். (எ-க)

# மக்கள் கருத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் இரண்டரை மணிநேரத்துக்கு மேல் நடந்த இந்தச் சந்திப்பின்போது நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சருடன் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் வேறு அதிகாரிகள் இரண்டொருவரும் கலந்துகொண்டனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சி சமாதான செயலகத்தின் செயலாளர் புலித்தேவன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

பேச்சுகள் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் வரை நீடித்தன.

பேச்சுகள் முடிவடைந்ததையடுத்து சு.ப. தமிழ்ச்செல்வன் அங்கு சமுகமளித்திருந்த ஊடகவியலாளருக்குப் பேட்டியளித்தார்.

அதன் விவரம் வருமாறு:-

**கேள்வி:-** இன்றைய சந்திப்புப் பற்றி..?

**பதில்:-** தற்போது உருவாகியுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்து விரிவாகப் பேசினோம். நிலைமையின் பாரதூரமான விளைவுகள் குறித்தும் எடுத்துச் சொன்னோம். யுத்தநிறுத்த உடன்பாடு பாரிய நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டிருப்பது பற்றியும் மக்கள் சமாதான முன்னெடுப்புகளில் முழுமையான நம்பிக்கை இழந்துள்ள சூழல் பற்றியும் மக்கள் தமது உளப் பாங்கையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தும் விதம்பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறினோம். அவர்கள் புரிந்துகொண்டிருப்பர்.

**கே:-** யாழ்ப்பாணத்தில் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் நிலைமை குறித்து சந்திப்பின் போது பேசப்பட்டதா?

**ப:-** யாழ்ப்பாணம் மட்டுமல்லாது தமிழர் தாயகப் பிரதேசத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளோம். யாழ்ப்பாணத்தில் உருவாகியுள்ள நிலைமை தொடர்பாக விரிவாக ஆராய்ந்தோம். நிலைமைகளைத் தெளிவாக விளக்கினோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள், கொலை முயற்சிகள், நெருக்குவாரங்கள் தொடர்வதால் மக்கள் மத்தியில் குழப்பமான - கொந்தளிப்பான நிலை ஏற்பட்டுள்ளது. அதனூடாக நடைபெறும் சம்பவமாகவே யாழ்ப்பாணம் இணுவிலில் நடந்த சம்பவத்தை நாம் பார்க்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு நிலை தொடர்வதால் அங்கு நடக்கும் விடயங்களை முழு அளவில் அறியமுடியவில்லை. போக்குவரத்து முடக்கப்பட்ட நிலையில் எமது போராளிகளுடன் தொடர்புகொள்ள முடியாதுள்ளது. அதனால் விவரங்களை அறிய முடியவில்லை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமானதாலும் அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாலும் நிலைமையை எவ்வளவு தூரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் எனச் சொல்ல முடியாமல் இருக்கின்றது.

**பாதுகாப்பான போக்குவரத்து**

**கே:-** போராளிகளின் போக்குவரத்துத் தொடர்பாக அரசின் யோசனைக்கு நீங்கள் பதில் அனுப்பியுள்ளீர்கள் என அறிகின்றோம். அந்தப் பதிலில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது.

**ப:-** எமது போராளிகளின் பயணம் குறித்த நடைமுறைகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக அரசுக்கு அனுப்பியிருந்தோம். ஆனால், அந்த நடைமுறையை ஏற்று அரசு பதில் தரவில்லை. பயணம் செய்யும் போராளிகளின் எண்ணிக்கையை வரையறை செய்தும் பயண எண்ணிக்கையை வரையறுத்தும் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்ததால், அதை எமது தலைமைப்பீடம் ஏற்றுக் கொள்ளவில்லை.

நேற்றுமுன்தினம் அவர்கள் புதிய நடைமுறை குறித்து மீண்டும் யோசனை அனுப்பியுள்ளனர். அது எமது தலைமைப்பீடத்தின் பரிசீலனையில் உள்ளது. அந்தப் புதிய யோசனையில் கூட அம்பாறை மாவட்டத்துக்கான பயண ஏற்பாடுகள் தரப்படவில்லை.

**கே:-** பொதுக்கட்டமைப்புக் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது அதனை நடைமுறைப்படுத்த அரசு முனைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன? என்ன கோரிக்கைகளை முன்வைத்துள்ளீர்கள்?

**ப:-** புதிய யோசனை எதனையும் முன்வைக்கவேண்டிய தேவை இல்லை. கட்டமைப்புத் தொடர்பாக 6 மாதங்களாகக் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றுத்தான் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொதுக்கட்டமைப்பில் உள்ள சரத்துக்களை நடைமுறைக்குக் கொண்டுவந்தால் சரி. இதற்காக நிபந்தனையோ, கோரிக்கையோ முன்வைக்கத் தேவையில்லை.

**சர்வதேச சமூகம் பொறுப்பு**

இரண்டு தரப்புகளும் உடன்பாடு கண்டு சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் இந்தக் கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. சர்வதேசமே இதை முடிவு செய்யவேண்டியது அவசியமாகும்.

**கே:-** மக்கள் ஒன்றுபட்டு பேராளர் மாநாடு நடத்தி மனுக்களைத் தொடர்ச்சியாகக் கையளித்து வருகின்றனர். இது தொடர்பாக தங்கள் கருத்து....?

**ப:-** இது தொடர்பாக இன்றைய சந்திப்பில் எடுத்துக் கூறினோம். மக்களின் விருப்பத்தை நோர்வேத் தரப்புக்கு தெளிவு படுத்தினோம். மக்கள் தமது கருத்துகளை தற்சமயம் எமது தலைமைப்பீடத்துக்குத் தெரிவித்து வருகின்றனர். தமது பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வேண்டும் என்பதே மக்களின் வேண்டுகோளாக இருக்கின்றது. ஆகவே, மக்களுக்கு மதிப்பளிக்க வேண்டிய நிலையில் எமது தலைமைப்பீடம் இருக்கின்றது. மக்கள் தமது உணர்வுகளைச் சர்வதேசத்துக்கும் எமது தலைமைக்கும் வெளிப்படுத்தி வருகின்றனர். நோர்வே அனுசரணையாளர்களுக்கு இதைத் தெரிவித்தோம்.''

-இவ்வாறு தமிழ்ச்செல்வன் கூறினார்.

## பயிற்சிப் பட்டறை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.6

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மற்றும் சுகவாழ்வு நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்த ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று ஆரம்பிக்கப்பட்ட சங்கானை, கரவெட்டி ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறையே இவ்வாறு பிற்போடப்பட்டுள்ளது என்றும் -

பயிற்சிப் பட்டறை ஆரம்பமாகும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கனேடியத் தேர்தலில் தமிழர் வேட்பாளர்



கனடாவில் ஸ்கா பரோ தென்மேற்குத் தொகுதியில் கன்சர் வேடிவ் கட்சி சார்பில் வின்சன்ற் (வசந்) வீரசுந்தரம் வேட்பாளராகப் போட்டியிடுகிறார். அவர் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார்.

சுமார் 67 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட இத்தொகுதியில் 2 ஆயிரத்து 600 தமிழ் வாக்காளர்கள் உள்ளனர்.

கடந்த தேர்தலில் இங்கு மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே லிபரல் கட்சியிடம் கன்சர்வேடிவ் கட்சி தோற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று தேர்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய தேவி மஹோற்சவத்தில் ரதோற்சவம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

கடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவந்த உற்சவத்தில் இன்று ரதோற்சவமும் நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (எ-3)

## பாலர் விளையாட்டுவிழா

கோப்பாய்,ஓக.6

வலி.கிழக்கு பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலக பிரிவிற்குட்பட்ட கஜமுகன் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் உப அலுவலகப் பொறுப்பதிகாரி தி.மாணிக்கவாசகர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (எ-72)

## கிளிநொச்சி விளையாட்டுத்துறையில் இன்று சந்திப்பு

கிளிநொச்சி,ஓக.6

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுச் சங்கங்களின் (லீக்) அனைத்து உறுப்பினர்களுக்கான சந்திப்பு இன்று காலை 10 மணிக்கு விளையாட்டுத்துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (எ)

## சிவபூமி பாடசாலையில் இன்று விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஓக.6

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மன விருத்திப் பாடசாலையின் விளையாட்டுவிழா இன்று மாலை 4 மணிக்கு கோண்டாவில் சிவமகா காளி ஆலய வீதியில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி சிவயோகன் தம்பதிகள் இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். (எ)

## பட்டதாரி நேர்முகத்தேர்வு மாற்று ஒழுங்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.6

ஊரடங்கு காரணமாக நேற்றைய தினம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத பட்டதாரிகள், நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். கல்விவலய நிர்வாக அலுவலர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் நேற்றைய தினம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பட்டதாரிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு இடையில் ஏதாவதொரு தினத்தில் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கலாம் என்றும் -

ஏனையோருக்கான நேர்முகத்தேர்வு இன்று முதல் வழமைபோல் நடைபெறும் என்றும் - நிர்வாக அலுவலர் மேலும் கூறினார். (எ)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## காலம் தாழ்த்தினால் வருந்த நேரும்

இலங்கை இனப்பிரச்சினையின் வெளிப்பாடு, புறத்தோற்றத்தில் யுத்த நிறுத்தம் என்ற பூச்சினால் பூசி மெழுகி, அமைதியைப் பிரதிபலிப்பதாக இருந்தாலும், உள்ளே நெருப்பாய் - எரிமலையாய் - அது கனன்று கொண்டிருக்கிறது. எந்நேரமும் அது வெடித்துச் சிதறலாம் என்ற ஆபத்துநிலை - ஏதுநிலை - தென்படுகின்றது.

வெடித்துச் சிதறப்போகும் எரிமலைக் குழம்பு, வெளித்தோற்றத்துக்குத் தென்படாமல் உள்ளே வெகு சூடாக இருப்பதை, அதன் தெறிப்பாக ஆங்காங்கே வெளிப்படும் சம்பவங்கள் நிரூபிக்கின்றன. யாழ்ப்பாண அசம்பாவிதங்கள், கஞுவாஞ்சிக்குடி கிரனேட் வீச்சுச் சம்பவம் போன்றவை எல்லாம் அந்தத் துளிகளில் சிலவே.

இனப்பூசலுக்கு - இன முறுகலுக்கு - அமைதித்தீர்வு காணும் முயற்சிகள் முற்றாக முடங்கி, தேங்கி, அடைபட்டுப் போய் இரண்டு ஆண்டுகளாகப் போகின்றன.

சர்வதேச அழுத்தமும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமும் 'சேடம் இழுக்கும் உடலில் உயிரைப் பிடித்து இழுத்து வைத்திருப்பது போல' யுத்தம் வெடித்து விடாமல் யுத்த நிறுத்தம் பேணும் நிலையைப் பிடித்து இழுத்து வைத்திருக்கின்றன.

இணுவிலில் சிகையலங்கரிப்பு நிலையத்தில் அப்பாவி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமையும், அதன் பின்னர் அரங்கேறிய சம்பவங்களும், யாழ். பொலீஸ் அத்தியட்சகர் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவமும் மிகவும் துரதிர்ஷ்டவசமானவை; கண்டனத்துக்கும் விமர்சனத்துக்கும் உரியவை.

1977 ஆவணி அமளியும், 1983 ஆடிக் கலவரமும் தமிழர் நெஞ்சில் நீங்காத வடுக்களாய் சுட்ட நெருப்புகள்.

வீதிக்கு இறங்கிக் கூட்டமாகப் புரியும் காடைத்தனத்தின் கொடூரங்களை 1977இலும், 1983இலும் தமிழினம் கண்டது. அக் கொடூரங்களைப் புரிந்தவர்களை உலகே தூற்றியது; நிந்தித்தது. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தும் அங்கங்களில் சிலவாக ஆடிக் கலவரமும், ஆவணி அமளியும் அமைந்தன.

அதேபோல, அடக்குமுறைக்கு எதிரான மக்களின் உத்வேகமும் உணர்ச்சியும் அடக்குமுறையாளனின் செய்கைகளை நியாயப்படுத்தும் நடவடிக்கைகளாகிவிடக்கூடாது.

அப்பாவி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை ஒரு சிறிய சம்பவம் அல்ல. இவ்வரிசையில் இது முதல் நிகழ்வும் அல்ல. தொடர்ந்து அரங்கேறும் அராஜகங்களின் வழியில் ஒன்றாக இது நிகழ்ந்ததால் மக்களின் கோபமும், எரிச்சலும், சீற்றமும் கட்டு மீறியதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. என்றாலும், அதில் ஒரு கட்டுப்பாட்டை - கட்டுக்கோப்பை - கடைப்பிடிப்பதற்குத் தவறுகின்றபோது, இத்தகைய நிகழ்வுகள் வேறு அர்த்தங்களை - விளைவுகளை - ஏற்படுத்திவிடும் என்பதைச் சகலரும் கவனத்தில் கொள்வது நல்லது.

இரண்டு தசாப்த காலக் கொடூர யுத்தத்தின் பின்னர் இனப்பிணக்குக்கு அமைதிமுறையில் தீர்வு காண்பதற்கான அருமையான சந்தர்ப்பம் இம்முறை கிட்டியது. ஆனால், அது பெரும்பாலும் கோட்டை போய்விடும் என்ற அவநம்பிக்கை வலுத்து வருகின்றது.

இந்தப் பொன்னான வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்துவதில் கவனத்தைச் செலுத்துவதை விடுத்து - சமாதான முயற்சிகளில் தீர்க்கமாக ஈடுபட்டு ஐம்பது ஆண்டுகால இனப்பூசலுக்கு விரைந்து ஓர் அமைதித் தீர்வைக் காண்பதைத் தவிர்த்து - தன்னுடைய அரசியல் சூதாட்டத்தில் தென்னிலங்கை தீவிர கவனம் செலுத்துகின்றது.

அதிர்ந்துகொண்டிருந்த யுத்த முனையில் அமைதியும், கனன்று கொண்டிருந்த துப்பாக்கிகளின் முனையில் நிசப்தமும் நிலவுவது தென்னிலங்கை அரசியல்வாதிகளின் கவனத்தை - இந்த இனப்பூசலின் முக்கியத்துவத்தை - மறந்து வேறு புறம் திரும்பவைத்துவிட்டன. அதிகாரப் போட்டியிலும், பதவி வேட்கையிலும், ஆட்சி இழுபறியிலும் மூழ்கிப்போயிருக்கும் தென்னிலங்கை அரசியல் தலைமைகள், இனப்பூசல் என்ற விவகாரம் வெளியே அமைதியாகத் தோன்றினாலும் உள்ளே பூதாகரமாக எழுச்சிபெற்று வெடிக்கத் தயாராகிக்கொண்டிருக்கின்றது என்பதைக் கவனிக்கத் தவறிவிட்டன. அல்லது கண்டுங் காணாதது போல அந்த மோசமான நிலையை உதாசீனம் செய்து செயற்படுகின்றன.

அதன் விளைவு விபரீதமாக முடியும், இங்கொன்றும் அங்கொன்றுமாக வெடிக்கும் மோதல் சம்பவங்கள் நிலைமை மோசமாகிவருவதையே தெளிவுபடுத்துகின்றன.

ஒரு புறம் அமைதித் தீர்வுகாண்பதில் தென்னிலங்கைத் தலைமைகளின் அசிரத்தைப் போக்கு; மறுபுறம் தமிழர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுக்கு எதிராக மறைவில் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் இருள் யுத்தம்; இரண்டு தசாப்த கால கொடூர யுத்தத்தினாலும் , அதன் பின்னர் பேரழிவாய் வந்த ஆழிப்பேரலைத் தாக்கத்தினாலும் அவலமுற்று அல்லல்படும் மக்களின் அவசர, அவசிய மனிதாபிமானப் பணிகள் முன்னெடுக்கப்படாத புறக்கணிப்புப் போக்கு; தமிழ் மக்களின் வாழ்வாதாரமான தாயகப் பூமியில் கணிசமான பகுதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கபளீகரம் செய்யப்பட்டு, அந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் உதாசீனப்படுத்தப்படும் நிலைமை.- இப்படி விடயங்கள் இழுபறிப்படுவதால் மக்களின் விசனமும், எரிச்சலும், அதிருப்தியும், கோபமும் உச்சத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன.

இனப்பிரச்சினையை அமைதிவழியில் தீர்க்கும் முயற்சியில் முழுக் கவனத்தையும் செலுத்தி, முழு ஈடுபாட்டுடன், இதயசுத்தியுடன் அதில் ஈடுபடத் தென்னிலங்கைத் தலைமை இனிமேலும் தாமதம் காட்டுமானால், தமிழ் மக்களின் எரிச்சலும், சீற்றமும் கட்டுமீறிப் போய் திரட்சி அடைந்தால் அது மீளத் திருத்த முடியாத பேரழிவுக்கே இலங்கைத் தீவை இட்டுச் செல்லும் என்பது நிச்சயம். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்ட பின்னர் வருந்துவதில் அர்த்தமில்லை.

# இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு பொதுமக்கள் பதிலடி கொடுப்பார்கள்!

## பல்கலை.மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.6

இராணுவத்தினரின் தாக்குதல்களுக்குப் பொதுமக்கள் பதிலடி கொடுப்பார்கள்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

இணுவிலில் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :-

யாழ்ப்பாணம், இணுவில்ப் பகுதியில் இராணுவத்தால் அப்பாவி இளைஞன் கொல்லப்பட்ட சம்பவத்தை யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இராணுவத்தால் தமிழ்மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு செயலாகவே இதனைக் கருதுகின்றோம்.

பெருமளவு மக்கள் வாழ்கின்ற நகரப் பகுதியில் மக்களை மிரட்டுகின்ற நோக்கோடுபட்டப்பகலில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலானது தற்போதைய போர்நிறுத்த உடன்படிக்கையை அப்பட்டமாக மீறுகின்ற ஒரு செயலாகவே இருக்கின்றது. இவ்வாறான இராணுவத்தின் திட்டமிட்ட தாக்குதல்களையும் அடவடித்தனங்களையும் பொறுத்துக் கொள்ளமுடியாது. தொடர்ந்தும் இராணுவத்தினர் திட்டமிட்டு நிராயுதபாணிகளான போராளிகள் மீதும் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் மேற்கொண்டுவரும் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலின் ஓர் அங்கமாகவே இத்தாக்குதல்சம்பவம் இடம்பெற்றுள்ளது.


இணுவிலில் கடத்திக் கொல்லப்பட்ட யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் சடலம்.

எனவே, இனியும் பொதுமக்களையும் போராளிகளையும் இழப்பதற்கு நாம் தயாராக இல்லை வெகுவிரைவில் மக்கள் திரண்டெழுந்து இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனத்திற்கு தகுந்த பதிலடியைத் தருவார்கள்.

இராணுவத்தின் காடைத்தனத்திற்கு உயிரிழந்த இளைஞனுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரது உறவுகளிற்கு யாழ்.பல் கலைக்கழக மாணவர்களாகிய நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# மக்கள் கூடும் இடங்களுக்கு துப்பாக்கியுடன் வருவதைப் படையினர் தவிர்க்க வேண்டும்

## இணுவில் சம்பவம் குறித்து மாவை எம்.பி. கருத்து

யாழ்ப்பாணம்,ஓக.6

பொதுமக்கள் கூடும் இடங்கள் மற்றும் கோயில்கள், சந்தைகள், வர்த்தக நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்களில் ஆயுதங்களுடன் படையினர் நடமாடுவதை உடன் நிறுத்தவேண்டும். அப்போதுதான் தேவையற்ற விபரீதங்களைத் தவிர்க்கமுடியும்.

- இப்படித் தெரிவித்தார். யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

இணுவில் பகுதியில் நடந்த சூட்டுச் சம்பவம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இணுவிலில் நடந்த சம்பவம் தொடர்பாக படையினரோ, பொலீஸாரோ பொதுமக்களுடன் கலந்துரையாட எண்ணியிருந்தால், முதலில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் தொடர்புகொண்டு அவர்களுடைய பிரசன்னத்துடன் சம்பவ இடத்திற்கு வந்திருக்கவேண்டும்.

யுத்தநிறுத்த உடன்பாட்டைக் கண்காணிக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் பொலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து இடத்தைப் பார்வையிட்டிருந்தால், விபரீதமான நிலைமை ஏற்பட்டிருக்காது.

பொதுவாக இதுபோன்ற சம்பவங்களின்போது சம்பவ இடத்தில் தடயங்கள் அழிக்கப்பட்டுவிடும் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது. இதன் காரணமாகவே விபரீதங்கள் ஏற்படுகின்றன.

எதிர்காலத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரசன்னத்துடன் பொலீஸார் செயற்பட்டால் விபரீதங்கள் தவிர்க்கப்படலாம்.

இராணுவத்தினர் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு ஆயுதங்களுடன் வரக்கூடாது. ஆயுதங்களுடன் வருவதுதான் இப்படியான சம்பவங்கள் ஏற்படக் காரணமாகின்றது.

இணுவில் சம்பவத்தின்போது கண்மூடித்தனமாகப் பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை மக்கள் மீது ஏவி அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளனர். இணுவில் சந்திக்கு அருகில் உள்ள எனது வீட்டின் மீதும் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. பீதியடைந்த மக்கள் பலர் எனது வீட்டுக்குள் தஞ்சம் புகுந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் மக்களுக்கு தஞ்சம் கொடுக்க வேண்டியது எனது கடமையாகும்.

கண்காணிப்புக்குழுவை அழைக்காமல் பொலீஸார் சம்பவ இடத்திற்கு வர முயற்சித்ததாலேயே மக்கள் கொந்தளிப்பு தீவிரமடைந்தது.

- இவ்வாறு மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (ஐ-3)

## வீரச்சாவடைந்தோர்

திருகோணமலை,ஓக.6

வீரச்சாவடைந்த தமிழீழத் தேசித் துணைப்படை வீரர்கள் இருவரின் பெயர்களை விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

10.07.2005 அன்று அன்புவெளி என்ற இடத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூதூர், திருகோணமலையைச் சேர்ந்த வீரவேங்கை விஜேந்திரராஜா (கம்பராஜ் விஜேந்திரராஜ) என்பவரும் - 17.07.2005 அன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மாவடிச்சேனை, திருகோணமலையைச் சேர்ந்த வீரவேங்கை உதயகுமார் (தம்பிராஜா உதயகுமார்) என்பவரும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ரி)

# உவர்நீர்த் தடுப்பணையில் சட்டவிரோத மணல் அகழ்வு

## தடுத்து நிறுத்தக் கோரிக்கை

சாவகச்சேரி,ஓக.6

தென்மராட்சி, மட்டுவில் தெற்கில் உள்ள உவர்நீர்த் தடுப்பணையில் உள்ள மணல் சட்டவிரோதமாக அகழப்பட்டு வருகிறது. இது குறித்து இப்பகுதி விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டது. மழை காலத்தில் உவர்நீர் குடியிருப்புகளுக்குள்ளும் வயல்களுக்குள்ளும் புகுந்து நீர் நிலைகளையும் விளை நிலங்களையும் பாழ்படுத்தாமல், தடுக்கவே இத்தடுப்பணை உருவாக்கப்பட்டது.

இதன் அணைக்கட்டுப்பகுதி கடந்த கால யுத்தச் சூழ்நிலையால் சிதைவடைந்துள்ளது. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி சுயநலக் கும்பல்கள் அணைக்கட்டு மண்ணை அகழ்ந்து விற்பதில் ஈடுபட்டுள்ளன. இதனைத் தடுத்து நிறுத்தச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் கோருகின்றனர்.(ஒ-31)

## உதயவாக்கு

மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரண தன்னம்பிக்கையை வெளிப்படுத்துவதுதான் கல்வி.

-ஓர் அறிஞன்.

## நாளை

ஆடி 22
ஞாயிற்றுக்கிழமை
07.08.2005
திதி: துதியை
பிற்பகல் 12.53 வரை
நட்சத்திரம்: மகம்
முற்பகல்: 10.22 வரை
ஆடிப்பூர நன்நாள்
சுபநேரம்: 09.04 - 10.34
ராகுகாலம்: 04.34 - 06.04
(யாவும் பழைய நேரப்படி)



## கருமாரி அம்மன் ஜோதிடம்



### ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி



இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார்.
இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன்-மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன், அறை எண் 9,**
**31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
T.P.No.: 0779233191 (38399)(21.18.19)

## ஈழத் தமிழர்களால் உருவாக்கப்பட்ட குறுந் திரைப்படங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ்.பல்கலைக்கழகத் திரைப்பட வட்டமும் லண்டன் 'விம்பம்' அமைப்பும் இணைந்து நடத்தும் குறும்பட விழா கைலாசபதி கலையரங்கில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

ஈழத்தவர்களாலும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களாலும் தயாரிக்கப்பட்ட 14 குறும்படங்கள் இவ்விழாவில் காண்பிக்கப்படவுள்ளன.

2004 ஆம் ஆண்டில் 'விம்பம்' அமைப்பு நடத்திய குறும்படப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஈழத்துக் குறும்படக் கலைஞருக்கான பரிசுகளும் இவ்விழாவில் வழங்கப்படும்.

(ஐ)

### மிருசுவில் வடக்கில் காணிக் கச்சேரி

தென்மராட்சி,ஓக.6

மிருசுவில் வடக்கு பெரியானோடை குடியேற்றத் திட்ட குடியிருப்பாளர்களுக்கான காணிக் கச்சேரி எதிர்வரும் எட்டாம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மிருசுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில் நடைபெறும் என தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(எ-117)



150 நாடுகளில் மிகப் பிரபலமான சர்வதேச வாழும் கலை அற நிறுவனம் நடத்தும்.

## இளைஞர் பயிற்சி

பயிற்சியின் மூலம் கிடைக்கும் பலன்கள்
மன இறுக்கத்திலிருந்தும்,உளைச்சலிலிருந்தும் பூரணமான விடுபாடு,சுய நம்பிக்கையும், சுய மேம்பாடும் அடைய, உடல் வருத்தம், சோர்வு நீங்கி உரம் பெற, முரண்பாடுகளுக்கு தீர்வு கண்டு தக்கபடி நிலைமையை சீர் செய்ய, படைப்பாற்றல் பெருகி ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் செயற்பட, ஆத்ம சக்தியை அறிந்து கொள்ள.

*தகுதி:*
**18 வயது முதல் 35 வயதிற்குப்பட்ட ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சியை மேற்கொள்ள லாம்.**

*பயிற்சி நாள்கள்:* 11.08.2005 முதல் 17.08.2005 வரை
*பயிற்சி நேரம்:* காலை 7.30 முதல் 4.30 மணி வரை
*பதிவு செய்யும் இடம்:* ஹலோக் வீதி, தேசிய சேமிப்பு வங்கி எதிரில், யாழ் வீதி, மானிப்பாய்
*பதிவு செய்யும் நேரம்:* தினமும் காலை 9 முதல் மதியம் 2 மணி வரை

இலவச மதிய உணவுடன்

*மேலும் விவரங்களுக்கு:-* 071 305 5923, 0777 250879, 077 9059549.

**இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்**

உ
அம்பாள் துணை



## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்
### ஆடிப்பூர (ருதுசாந்தி) திருவிழா
### 07.08.2005 ஞாயிற்றுக்கிழமை

**அம்பிகை அடியார்களே!**

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயிலில் எதிர்வரும் 07. 08. 2005ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூரத்திருவிழா (ருதுசாந்தி) மிகவும் சிறப்பான முறையில் நடைபெற திருவருள்கூடியுள்ளது அன்று காலை 10.30 மணிக்கு மூலமூர்த்தி அம்பாளுக்கு நவோத்தர சகஸ்திர மஹா கலசாபிஷேகமும் (1008 கலசம்) எழுந்தருளி அம்பாளுக்கு அஸ்டோத்தர சதகலச அபிஷேகமும் (108கலசம்) ஏனைய மூர்த்திகளுக்கு விசேடஅபிசேகங்களும் நடைபெறும். அபிஷேகங்களைத் தொடர்ந்து பூஜை "பூரகர்மா" (ருதுசாந்தி) தீபாராதனை திருவூஞ்சல், வேதஸ்தோத்திர திருமுறைப்பாராயணம், ஆகியவையும் அதனைத்தொடர்ந்து அம்பாள் அழகிய தாமரைப்பூ வாகனத்தில் ஆரோகணித்து வீதியுலாவரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து அருட்பிரசாதமும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபையினரால்அமுதசுரபி அன்னதான சபை மண்டபத்தில் அடியார்களுக்கு அன்னதானம் (மகேஸ்வரப்பூஜை) மிகவும் சிறப்பான முறையில் வழங்கப்படும்

**உற்சவ சிவாச்சாரியார்கள்**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில் ஆதீனகுருமணிகள்**
"சிவபூஜாகல்பநிதி" சிவஸ்ரீசாமிநாத பாலசுந்தரக்குருக்கள்
"ஆகம பிரவீணா" சிவஸ்ரீ கைலாசநாத வாமதேவக்குருக்கள்

விசேட மேளக்கச்சேரிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. அடியாள் உரியகாலத்தில் அம்பாளின் சந்நிதானத்திற்கு வருகைதந்து நிகழ்வுகளை கண்டு, அன்னையை வழிபாடு செய்து இஷ்டசித்திகளை பெற்றுயுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (38459)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்
ஆடிப்பூரத்திருவிழா உபயகாரர்கள்

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி





| செல்வி அ.இந்துமதி | | திருமதி கி.சிவகெங்கா |
|---|---|---|
| 05-05-1968 | தோற்றம் | 10-04-1950 |
| 25-07-1998 | மறைவு | 25-07-1998 |

திதி:06-08-2005

**ஆழ்கடலில் இருவிரும் ஆழையாள் அணைத்தவண்ணம்**
**அகாலத்து மறைந்த துயர் அதிசிறிதும் ஆற்றுகிலோம்!**
**மீன்ஜென்மம் தனையெடுத்து எம்குடியில் உதிப்பதற்கு**
**விண்ணிருந்து வாரீரோ? துயரமெல்லாம் தீரோமோ!**

(38435)

*தங்கள் பிரிவால் துயர் மூழ்கும்:*
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.
ஆ.கி.அருணகிரிராசாவும் குடும்பத்தினரும்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பு அல்கிற்கான முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கான

# பதவி வெற்றிடங்கள் (தற்காலிகமானவை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியரல் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பிற்கான அலகிற்கான மாவட்ட முகாமையாளர் அலுவலகத்திற்குக் கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| கோரப்படும் பதவிகள் | தேவைப்படும் ஆளணி |
|---|---|
| 01. தொழில்நுட்பு உதவியாளர் | 01 |
| 02. தொழில்நுட்ப உத்தியோகத்தர் | |
| (1) முதுநிலை | 01 |
| (2) இளநிலை | 01 |
| 03. திட்ட உதவியாளர் | 01 |
| 04. தரவுநிரல்படுத்தும் உத்தியோகத்தர் | 01 |

மேற்படி பதவிகளுக்குக் கீழ்வரும் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் 20-08-2005 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் *அரசாங்க அதிபர்,கச்சேரி, முல்லைத்தீவு* என்ற முகவரிக்கு விண்ணப்பிப்பதுடன், கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பிற்கான அலகு.............................. பதவி வெற்றிடம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சொந்த இடமாகக்கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*மேற்படி பதவிகளுக்கு எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:*

*(1)* தொழில்நுட்ப உதவியாளர்
- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T.) பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

*(2)* தொழில்நுட்ப உத்தியோகத்தர்

*(1) முதுநிலை உத்தியோகத்தர்*
- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T.) அல்லது மத்தியதர தொழில்நுட்ப சேவையில் (M.L.T.) தரம் 1 இல் உடையவராகவும் -
- அத்துடன் கூடிய சேவை அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

*(11) இளநிலை உத்தியோகத்தர்*
- க.பொ.த. (சா/த) இல் கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறுபாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்,
- கட்டட நிர்மாணத்துறையில் 10 வருட தொழில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

*(3)* திட்ட உதவியாளர்
- புவியியல் அல்லது சமூகவியல் பாடங்களைக் கற்று பட்டதாரியாக இருத்தல் வேண்டும். சமூகவியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*(4)* க.பொ.த. (சா/த) இல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், கணனித்துறையில் கூடிய தகைமைகளையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**திருமதி இமெல்டா சுகுமார்,**
*அரசாங்க அதிபர்,*
*முல்லைத்தீவு மாவட்டம்.*

(சி-44407) (26-14-19)

# வீட்டின் ஜன்னல் ஊடாக நுழைந்து தங்கநகைகள், ரொக்கப்பணம் திருட்டு

## கல்வியங்காடுப் பகுதியில் சம்பவம்

வலி.கிழக்கு,ஓக.6

கல்வியங்காடுப் பகுதியில் வீடு ஒன்றில் இருந்து சுமார் 60 பவுண் நகைகளும் ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணமும் திருடப்பட்டிருப்பதாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. கல்வியங்காடு வீரபத்திரர் வீதியில் உள்ள எஸ்.தேவராசா என்பவரது வீட்டிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

திருடர்கள் வீட்டின் பின்புறமாகவுள்ள ஜன்னல் கம்பியினை வளைத்து உள்நுழைந்து உள்ளே அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி, சங்கிலி, காப்பு உட்பட 60 பவுண் தங்க நகைகளையும் ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணத்தினையும் திருடியுள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்தோர் அதிகாலை எழுந்து அறையைத் திறந்து பார்த்தபோதே திருட்டுப் போன விடயம் தெரியவந்துள்ளது.(ஐ-180)

# வீணியவரை ஆலயம் செல்ல பக்தர்களுக்கு விசேட ஒழுங்கு

யாழ்ப்பாணம்,ஓக.6

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் ஆடிப்பூர உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் ஆலயத்துக்குச் செல்பவர்கள் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் தவிர்ந்த வாகனங்களில் செல்வதற்குப் படையினர் அனுமதி அளித்துள்ளனர் என்று ஆலய அறங்காவலர் ஸ்ரீ துரைசாமி ஐயர் தெரிவித்தார்.

நாளை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை ஆலயத்திற்குச் சென்றுவர முடியும் என்றும் - தடை முகாமிலிருந்து ஆலயத்திற்குச் செல்வதற்குக் காலையில் வாகனவசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-202)

# தென்மராட்சி வடக்கில் பரவலாக மணல் அகழ்வு

தென்மராட்சி,ஓக.6

தென்மராட்சி வடக்குப் பகுதியில் சட்ட விரோதமாக வாகனங்களில் மணல் ஏற்றப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வரணி, இடைக்குறிச்சி, நாவற்காடு போன்ற இடங்களில் இரவு பகலாக வயல்கள், தனியார் காணிகள் ஆகியவற்றிலிருந்து வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்லப்படுவதாகவும், ஆயுதங்கள், கொட்டன்கள் போன்றவற்றுடன் வாகனங்களில் வருவோர் மணல் ஏற்றிச் செல்வதால் காணி உரிமையாளர்களால் அதனைத்தடுக்க முடியவில்லை என்றும் - கூறப்பட்டது.

அப்பகுதியில் உள்ள முக்கிய சந்திகளில் சீருடையினர் கடமையில் உள்ளபோதிலும், அவர்களுக்கும் தெரியாமல் வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# முஸ்லீம்கள் ஆதரவு பற்றி பிரதமர் - ஹக்கீம் பேச்சு!

## றியாத்தில் நடந்தது சந்திப்பு

கொழும்பு,ஓக.6

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ றியாத்தில் வைத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீமுடன் முக்கிய பேச்சுகளை நடத்தியிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

சவூதி மன்னரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக இரு தலைவர்களும் றியாத் சென்றிருந்தபோது இதுதொடர்பான பேச்சுகள் இடம்பெற்றன எனப் பிரதமருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

ஜனாதிபதித் தேர்தலின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடைப்பிடிக்கவுள்ள போக்குக் குறித்து ஹக்கீம் அப்போது பிரதமருக்கு விளக்கிக்கூறினார் என்றும் தெரிகிறது. பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் பங்கு, சமாதான முயற்சிகளில் முஸ்லிம்களின் பங்களிப்பு போன்ற விடயங்களில் யார் முஸ்லிம்களுக்குச் சாதகமான நிலைப்பாட்டைக்கொண்டுள்ளார்களோ அவர்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒத்துழைப்பை வழங்குமென்றும் இதுபற்றி ஜனாதிபதி வேட்பாளர்களான மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவருடனும் தனித்தனியாகப் பேச்சுகளை நடத்தத் தமது கட்சி தயாரென்றும் ரஊப் ஹக்கீம் கூறினார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

இரு பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களும் முஸ்லிம்கள் குறித்த தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக வெளியிட வேண்டுமென்றும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

(ஐ-க)

# சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய பண்டத்தரிப்பு உணவகம் மீது வழக்கு

வலி.தென்மேற்கு,ஓக.6

பண்டத்தரிப்பு பட்டின பிரதேசத்தில் சுகாதார விதிகளுக்கு முரண்பட்ட வகையில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்பட்ட உணவகம் ஒன்றின்மீது வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர், மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வாரம் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2ஆம் திகதியன்று பண்டத்தரிப்பு பட்டின பிரதேசத்திலுள்ள தேநீர்க்கடைகள், உணவகங்கள் மற்றும் பேக்கறிகளில் இளவாலை பொது சுகாதார பரிசோதகர் கு.கருணாநிதி, பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் என்.நிர்மலானந்தன் ஆகியோர் திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

அத்தருணம் மேற்படி உணவகத்தில் சுகாதாரச் சீர்கேடு காணப்பட்டதால் இவ் வழக்கு தாக்கல்செய்யப்பட்டதாக அறியப்படுகின்றது.(எ-135)

# பிரதமரின் செய்திகளைத் திரட்டுவதில் அரச ஊடகங்கள் அக்கறையில்லை

## அலரிமாளிகையில் ஊடகப்பிரிவு விசனம்

கொழும்பு,ஓக.6

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளும் நிகழ்வுகள் மற்றும் பொதுக்கூட்டங்கள் தொடர்பான செய்திகளைத் திரட்டுவதற்கு அரச ஊடக நிறுவனங்கள் முக்கியத்துவமளிப்பதில்லையென அலரிமாளிகையின் ஊடக வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன.

கொழும்புக்கு வெளியில் பிரதமர் கலந்து கொள்ளும் நிகழ்வுகள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்குப் பிராந்திய ரீதியிலுள்ள செய்தியாளர்களை மட்டும் அரச ஊடகங்களின் உயர்மட்டம் அனுப்புவதாகவும், வழமையாக அலுவலகச் செய்தியாளர்களை இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு அனுப்பிவைக்கும் முறை நிறுத்தப்பட்டிருப்பதாகவும் பிரதமர் ஊடகப்பிரிவின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அநுராதபுரத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். இந்தத் தகவல்களைச் சேகரிக்க அரச ஊடகங்களின் பிராந்திய செய்தியாளர்களில் ஒரு சிலரே வந்திருந்தனர் எனவும் -

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை ஆரம்பிக்கவுள்ள பிரதமர் மஹிந்தவிற்கு இத்தகைய செயற்பாடே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் - அவர் குறிப்பிட்டார்.

இது குறித்தான விடயத்தைப் பிரதமர் மஹிந்தவின் கவனத்திற்குக் கொண்டுவர அவரது ஊடகப்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ-க)

# தலைநகரில் திங்களன்று நடக்கும் தமிழர்களின் கண்டனப் பேரணி

## தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டு ஆயத்தம்

கொழும்பு,ஓக.6

இந்திய வம்சாவளி தமிழர்களை தரக்குறைவாகப் பேசி இழிவுபடுத்திய பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக தலைநகரில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது. மலையகத்திலும் தலைநகரிலும் இந்திய வம்சாவளி மக்களின் மத்தியில் முப்பெரும் சக்திகளாகத் திகழும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகிய மூன்று அமைப்புகளும் இணைந்து இக்கண்டனப் பேரணியைநடத்தவுள்ளன.

எதிர்வரும் எட்டாம் திகதி திங்கட்கிழமை தலைநகரில் நடத்தப்படவுள்ள இந்தக் கண்டனப் பேரணியில் மலையகத்திலும் தலைநகரிலும் இருந்து பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் அரசியல் நாகரிகமற்ற செயலைக் கண்டித்தும் அவரைப் பதவி விலக்குமாறு வற்புறுத்தியும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த மலையக மக்கள் முன்னணி அனைத்து இந்திய வம்சாவளி அமைப்புகளும் அழைப்பு விடுத்திருந்தது தெரிந்தே.

அதேவேளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டதோடு, இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை ஒரு பேரணியா கவே நடத்தி இந்திய வம்சாவளி மக்களின் சக்தியை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என ஆர்வத்துடன் செயற்பட்டு வரு கின்றார்.

இவ்விடயம் தொடர்பாக இ.தொ.க. தலை வர் ஆறுமுகன் தொண்டமான், நேற்று மலைய மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன், மேல் மாகாண மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் ஆகியோருடன் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியிருக்கிறார். பேரணியைத் தமிழர்களின் எதிர்ப்பை ஒன்றுபட்டமுறையில் வெளிப்படுத்தும் விதத்தில் நடத்துவதற்கான திட்டங்களை அவர் வகுத்து வருகின்றார். (ஐ-க)

# பால்மா, ஷெல்காஸ் விலைகள் அடுத்த மாதம் முதல் குறைப்பு

## சிமெந்தின் விலையைக் கட்டுப்படுத்தவும் முடிவு

கொழும்பு,ஓக.6

பால்மா மற்றும் ஷெல்காஸ் என்பவற்றின் விலைகள் அடுத்தமாதம் முதல் குறைக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதிகரித்துச் செல்லும் சிமெந்தின் விலை ஏற்றத்தையும் தடுக்கும் வகையில் அதற்குக் கட்டுப்பாட்டு விலை ஒன்றையும் அரசு விரைவில் அறிவிக்கவுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்றுமுன்தினம் இவற்றை அறிவித்தார்.

பால்மா மற்றும் ஷெல்காஸ் என்பவற்றின் விலைகளைக் குறைக்க மறுக்கும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

பொதுமக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நோக்குடன் அரசு பால்மா மற்றும் ஷெல்காஸ் என்பவற்றிக்கு விதிக்கப்பட்டிருந்த 15 வீத வற்வரியை முற்றாக நீக்கியுள்ளது. இதனால் விலைகள் கணிசமான அளவு குறையும் -என்றார் அமைச்சர்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பால்மா மற்றும் ஷெல்காஸ் என்பவற்றின் மீதான வற்வரியை நீக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பித்தார். அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் வகையில் நிதி அமைச்சரின் இந்தச் சிபார்சுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அமைச்சரவையின் தீர்மானம் அடுத்தவாரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளது. அது வெளியான நாள்முதல் பால்மா மற்றும் ஷெல்காஸ் என்பவற்றிற்கான விலைகள் குறைக்கப்படவேண்டும். அவ்வாறு செய்ய மறுக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்- எனவும் அமைச்சர் சிறிபால டி சில்வா கூறினார்.(ஐ-க)

## சாட்சியமளிக்க நீதிமன்றுக்கு வராததால்

# பிரதி அமைச்சர் மேர்வினை கைதுசெய்யுமாறு உத்தரவு!

கொழும்பு,ஓக.6

நிதிமோசடி சம்பந்தமான வழக்கு விசாரணை ஒன்றுக்காக பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜராக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் கிஹான் பிலபிட்டிய நேற்றுமுன்தினம் கொழும்புப் பொலீஸ் மோசடி விசாரணைப் பிரிவின் பொறுப் பதிகாரிக்கு உத்தரவிட்டார்.

பிரதீப் விஜேவர்தன என்பவர் பத்துலட்சம் ரூபா ரொக்கப்பணத்தை தன்னிடம் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி கடனாகப் பெற்றார் எனவும் ஆனால், உறுதியளிக்கப்பட்டபடி அந்த நிதி திருப்பித்தரப்படவில்லையெனவும் தெரிவித்து பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவே இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கின் எதிரியான பிரதீப் விஜேவர்தன என்பவர் பலமுறை விசாரணைகளின்போது சமுகமளித்திருந்தாலும் சாட்சியாளர்களான பிரதியமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் ஏ.டி.விமலசேன ஆகியோர் மன்றில் ஆஜராவதில்லையென்று கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவுப் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர். இதனையடுத்து சாட்சியாளர்களைக் கைதுசெய்து மன்றில் ஆஜராக்குமாறு நீதிவான் பொலீஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

(ஐ-க)





யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரத்தின் (நந்தி) நினைவஞ்சலிக் கூட்டமும் நினைவு மலர் வெளியீட்டு நிகழ்வும் நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றன. இந்நிகழ்வை யாழ்.மருத்துவபீட மாணவர் மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

பேராயர் எஸ். ஜெபநேசன் அடிகளார், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படம்: கவிதரன்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

NPJN 8808 இலக்கமுடைய இலக்கத் தகடு 31-07-2005 அன்று யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 360/10, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P.0777598722. (88429)

## இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு

புறொயிலர் 1Kg 150/-,சுத்தம் செய்தது 1Kg 225/- கல்பேட் மற்றும் கோழித்தீன் புறொயிலர் குஞ்சுகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 1. NEW RSK FARM மானஸ் பாடசாலை வீதி, உடுவில். 2. NEW RSK FARM பெரியமதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (38533)

Prima உயிர் மற்றும் Broiler இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுகாதார முறைப்படிஉடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38368)

## பணிப்பெண் தேவை

குடும்பம் ஒன்றுக்கு வீட்டுவேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: எஸ்.பி. மணி, சண்டிலிப்பாய் சீரணிச் சந்திக்கு அருகில், டச்சுவீதி. (38491)

## வீடு விற்பனைக்கு

யாழ்.கொழும்புத்துறை வீதியில் 5 பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777222601 (38538)

## வாடகைக்கு

யாழ்நகருக்குள் மேல்மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. (கந்தோர் பாவனைக்கு மட்டும்) தொடர்பு: 021 222 3239. (38496)

மணித்தியாலம் மற்றும் நாளாந்தம் வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன், குளிரூட்டப்பட்ட திருமணக் காரும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P. 0777 593722, 0776 991899. (38049)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

காவலுக்குரிய Greate dane x Dobermann நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38530)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Orginal Prema Broiler குஞ்சுகள் (42/-) பேட்டுக்குஞ்சுகள் 08-08-2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். சிவகலை களஞ்சியம் - கோப்பாய், உமாகரன் - முருகமூர்த்தி கோயிலடி, உடுவில், நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38443)

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Orginal Prema Broiler குஞ்சுகள் (42/-) பேட்டுக்குஞ்சுகள் 08-08-2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம்- வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38283)

## விற்பனைக்கு

எம்மிடம் ஆட்டுக் கடாக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: No.20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (38514)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரியாலை, அருளம்பலம் வீதியில் (ஆத்திக்காடுப் பகுதியில்) 15 பரப்புக்கு மேற்பட்ட கிணற்றுடன்கூடிய வெறுங் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திருமதி சரஸ்வதி அருளம்பலம் அல்லது திருமதி நா.மகாதேவா (லண்டன்). 020 8933 3302, யாழ்ப்பாணம் T.P. 0776 248677. (66, அருளம்பலம் வீதி). (38448)

## வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு, 11 குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்புகொள்ளவும். T.P. 0114613157 (38328)



ஊர்காவற்றுறை - புளியங்கூடல் - செருத்தனைப்பதி

### ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்
### ஆடிப்பூர பூச்சொரிதல் விழா
### விஞ்ஞாபனம்

*அம்பிகை அடியார்களே!*

நிகழும் பார்த்திப வருட ஆடித்திங்கள் 22 - ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (07/08/05) பகல் விசேட சங்காபிஷேகம், திரவியாபிஷேகம், பூரகர்ம ஆராதனைகள், அடியார்கள் பூச்சொரிதல் விசேட தீபாராதனை, அம்பாள் வீதியுலா, மகேஸ்வர பூசை நடைபெற அம்பிகை அருள்பாலித்துள்ளமையால் அடியார்கள் யாவரும் வருகை தந்து அம்பிகை அருள்பெற்று ஏகுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

சுபமஸ்து

செருத்தனைப்பதி,
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

இங்ஙனம்
ஆடிப்பூர உற்சவ உபயகாரர்கள்.

விளம்பர அனுசரணை: ஒலிப்பதிவுத்துறையில் 25 வருட சேவையில்

RECODING SHATHEES STUDIO

சதீஸ் ஒலிப்பதிவு கலையகம்

இல. 25, J.M.C. கட்டடம்,
பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

T.P : 0777 917745

பாடல்களை CD,DVD, மற்றும் கசற்களில் உடனுக்குடன் பதிவுசெய்து கொள்ளவும் வீடியோ கசற்றை VCD, DVD க்கு மாற்றம் செய்யவும் உங்கள் நிகழ்வுகளை கணனி மூலம் படத்தொகுப்பு செய்து மெருகூட்டிக் கொள்ளவும் மின்உபகரணங்களைத் திருத்திக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய முன்னணி நிறுவனம்

## ஆடிப் பூரத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஓக.6

நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தின் ஆடிப்பூரத் திருவிழாநாளை இடம்பெறவுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமான ஆடிப்பூரத் திருவிழாவின் இறுதிநாளான நாளை 1008 சங்காபிஷேகம்இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து ருதுசாந்தி, தீபாராதனை, திருவூஞ்சல் ஆகியன நடைபெறும். (3-167)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.6

ஆடிப்பூரத்தை முன்னிட்டு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை காலை 8 மணி முதல் அம்பாளுக்கு அபிஷேகம், திருமஞ்சன நீராட்டல் என்பனவும் 9 மணி முதல் ருதுசோபன வைபவம், வசந்த மண்டபப் பூசை என்பனவும் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருவார். (3)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.6

ஆடிப்பூரத்தை முன்னிட்டு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் மகாலட்சுமிக்கு பி.ப. 4.30 மணிக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விஷேட பூசைகளும் இடம்பெறும். (3)

* * *

தென்மராட்சி,ஓக.6

சாவகச்சேரி, துர்காதேவி ஆலயத்தில் ஆடிப்பூர விழாவும் மாதரசிகளின் திருவிளக்குப் பூஜையும் நாளை நடைபெறும். காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை 108 சங்காபிஷேகமும் பி.ப. 2.30 மணிக்கு 108 திருவிளக்குப் பூஜையும் இடம்பெறும். (3-11)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.6

வண்ணை கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தானத்தில் ஆடிப்பூரத் திருவிழா நாளை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

காலை 7 மணிக்கு ஸ்நபனாபிஷேகத்துடன் ஆரம்பமாகித் திருவிழா நடைபெறும். (3)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவி காயம்!

சாவகச்சேரி கல்வயலில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவிக்குத் தலையில் காயம் ஏற்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

கல்வயலைச் சேர்ந்த ஆனந்தராசா தாரணி(வயது 16) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காகயாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

வீதி வளைவொன்றில் இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (எ-117)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை

### பதவி வெற்றிடம்

**கணக்காளர் பதவி-1** நிரந்தரம்
கு.இல.104/09 -(31/99)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சங்கத்தால் கோரப்படுகின்றன.

சம்பள அளவுத் திட்டம் :
(5000-110 x 10,120 x 10) + 1250/- + 2500/-

மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் பிரதம சங்க காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பமுடிவு திகதி: 20.08.2005

முக்கிய குறிப்பு: கணனிப்பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
03.08.2005 (சி-44421)(29-12-14)

பொதுமுகாமையாளர்
புலோலி ப.நோ.கூ. சங்கம்.

### GREEN INN RESTAURANT

எம்மிடம்
★ சைவ உணவு ★அசைவ உணவு ★ சிக்கன் பிரியாணி
★ பிரைட் ரைஸ் + டெவல் ★ மட்டன் பிரியாணி போன்றவை
பார்சல்களாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
எமது ரெஸ்ரோரண்டில் குடும்பமாக வந்து அமர்ந்து சாப்பிடவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

No.60, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel.:021 222 3898. Fax: 021 222 2298. Mobile:0776- 917030
Available A/c & Non A/C Rooms
With Attached Bathrooms.
(38421)



ஏழாலை தெற்கு
ஸ்ரீவசந்த நாகபூசணி
அம்பாள் தேவஸ்தானம்

### ஏகதின இலட்சார்ச்சனை

*அம்பிகை அடியார்களே!*

இலட்சார்ச்சனை 08.08.2005 திங்கள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். 09.08.2005 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு 1008 சங்காபிஷேகம், காலை 10 மணிக்கு விசேட பூஜை, 11 மணிக்கு விசேட சொற்பொழிவு, 11.30 மணிக்கு சுவாமி உலா வருதல் தொடர்ந்து அன்னதானம் ஆகியன இடம்பெறும்.

சிவஸ்ரீ தியாக.கெங்காதரக்குருக்கள் தலைமையில் பல சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மன் கோயில்,
ஏழாலை தெற்கு, ஏழாலை. (38498)(29-12-14) -தேவஸ்தானம்.



### கண்ணீர் அஞ்சலி

எமது ஒளிக்கலை ஒன்றிய உறுப்பினரான சு.சிவஞானசுந்தரம்
(றெயின்போ டியிட்டல் விஷன், மீசாலை)
அவரின் அன்புத் தந்தை

### சுந்தரம்

அவர்கள் காலமான செய்தி கேட்டு எமது ஒன்றியம் அனுதாபம் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கின்றது.

(38547)(29-12-14) -ஒளிக்கலை ஒன்றியம்.

### 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 - 05 - 1942



விண்ணில் 06 - 08 - 2001

அமரர்

### சின்னக்குட்டி தியாகராசா (தியாகு)

(முன்னாள் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்கள ஒப்பந்தகாரரும் கர்ணன் வாணிப உரிமையாளரும்)

வானத்தில் முழுமதி வந்து
மறைந்ததுபோல் மறைந்தனையோ!
வருடங்கள் நான்கென்ன! எத்தனையாயினும்
வற்றுமோ நெஞ்சில்நின் நினைவலைகள்?

330, யோகபுரம்,
மல்லாவி. (38545)(29-12-14) -குடும்பத்தினர்.

## SAAMSTECH இன் கணனி ஆசிரிய மற்றும் நிர்வாகப் பணியிடங்களுக்கான பயிற்சியும் பணி நியமனமும்

சுயவிவரக்கோவையுடன் கீழுள்ள திகதிகளில் வரவும்.

யாழ்ப்பாணம்: 6, 7 மற்றும் 8 ஆம் திகதிகள்

கொழும்பு: 8, 9 மற்றும் 10 ஆம் திகதிகள்

முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு முதல் 40 பேரே தெரிவுசெய்யப்படுவர்.

மேலதிக விவரம் 05.08.2005 நேற்றைய உதயன் மற்றும் வீரகேசரியில்.

நிர்வாகம்
SAAMSTECH.

(38559)(38-11-45)


## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை மணிவாசகன்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய பொருள் பரிசோதகர்)



சிவன்கோயிலடி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஐயாத்துரை மணிவாசகன் அவர்கள் 02.08.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் குணபாக்கியலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் குகதாசன் (பிரான்ஸ்), தயாழினி (பிரான்ஸ்), அமரர் வரதராஜன், கிரிஜா (பிரான்ஸ்), சிவச்சந்திரன் (2004/2005 NDBS ATI மாணவன்), சிவேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சுகந்தி (பிரான்ஸ்), சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), சர்வேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் தியாகேஸ்வரி, சௌந்தரராஜன் (ஓய்வுபெற்ற உப தபால் அதிபர் - சிவன் கோயிலடி), திருமதி மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் சிவப்பிரகாசம், திருமதி மைத்திரேயி (உப தபால் அதிபர்), பண்டரிநாதன், அமரர் திருஞானசம்பந்தர், அமரர் ஸ்ரீ ராமச்சந்திரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2005) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன்கோயிலடி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(சி-44434)(38-11-45)


## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

தாஸ் (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே).

## மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

மாதவன், சதா, கோவை சரளா மற்றும் பலர் நடித்த

பிரியசகி

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்

பெப்ரவரி 14

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

## நாதன்ஸ் சினிமா



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக அர்ஜுன் சினேகா, கிரண், வடிவேல் நடித்த

சின்னா

(ரீல்ஸ்)

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே.)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



அளவெட்டி மேற்கு, அளவெட்டியைச் சேர்ந்த

திரு.திருமதி சிவதரன் - கவிதா

தம்பதிகளின் செல்வப் புதல்வி

செல்வி சாரங்கா

அவர்கள் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (06.08.2005) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பாமார், அம்மம்மாமார், மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், சித்தப்பாமார், அத்தைமார் அனைவரும் பல்லாண்டு வாழ்ந்து சகல வளமும் பெற்று வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றனர்.

சாரங்கா

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(சி-44425)(38-11-45)

தகவல்:
குடும்பத்தினர்


## பிரிந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.

A/L பரீட்சை முடிவுகளுக்காகக் காத்திருக்கிறீர்களா?

இந்தியாவில் படியுங்கள்

B.Sc.
B.B.M.
B.C.A.

அல்லது

A/L பரீட்சையில் 2 பாடங்களில் சித்திபெற்றுள்ளீர்களா?

கருத்தரங்கும் அதிலேயே உடன் அனுமதியும்

கொழும்பு, ஹில்ரன் ஹோட்டலில் ஓகஸ்ட் 13 இல் கருத்தரங்கு பிந்தியதற்கான பதிவுக் கட்டணம் செலுத்துவதைத் தவிருங்கள்! மேற்குறிப்பிட்ட திகதியிலேயே சேர்ந்துவிடுங்கள்!!

கொம்பனி செக்கிறற்ரேரியல் சேர்விஸஸ் [பிறைவேட்] லிமிட்டெட்

285C 1/1, ஸ்ரான்லி திலகரத்னா மாவத்த, நுகேகொட.

தொ.பே. 011 2 854438, 0777 317043

(சி-44433)(38-11-45)

## Swan டீசல் என்ஜின்

- மிக மேன்மையான-நம்பிக்கை
- 4 ஸ்ரோக் என்ஜின்
- 20 H/P வரையிலான சக்தி
- உதிரிப்பாகங்கள் உண்டு



விற்பனைக்குப் பிந்திய சேவையுடன் கூடியது

ஏக முகவர்கள்

செண்ட் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்

524 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி : 112324281, ஃபெக்ஸ் 112446554

நாடெங்குமுள்ள விநியோகஸ்தர்களிடமும் கிடைக்கின்றன.


## தமிழ்த்தினப் போட்டிக்கு வவுனியா செல்லவுள்ளோர் கவனத்துக்கு!

அச்சுவேலி,ஓக.6

வவுனியாவில் இன்று சனிக்கிழமை காலை நடைபெறும் மாகாண மட்ட தமிழ்த்தினப்போட்டிகளில் கலந்துகொள்ளும் யாழ்.மாவட்ட மாணவர்களின் நிகழ்வுகளை இன்றையதினம் பிற்பகல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்று - யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட மாணவர்களை இந்தப் போட்டிகளில் பங்குபற்றுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதற்கிடையில் நாட்டுக்கூத்து நிகழ்வுகளில் நடுவர்களாக கடமைபுரிவதற்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் இன்று சனிக்கிழமை அதிகாலை 6 மணிக்கும், நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் போட்டிகளுக்கு நடுவர்களாக கடமைபுரிவதற்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னரும் யாழ்.வலயக்கல்வி அலுவலகத்திற்கு சமுகம்தருமாறும் - வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(எ-11)


## SAAMSTECH இன் இலவச ஆங்கில டிப்ளோமாவிற்கான நேரடி வகுப்பு பற்றிய முக்கிய அறிவித்தல்

07.08.2005 நடைபெறவிருந்த இலவச ஆங்கில டிப்ளோமாவிற்கான இலவச நேரடி வகுப்பு, தவிர்க்கமுடியாத காரணத்தினால் 13.08.2005 சனிக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

மேலதிக விவரம் 11.08.2005ஆம் திகதி உதயனில் தரப்படும். 10.08.2005 வரை புதிதாக சேர்வோரும் இவ்வகுப்பில் கலந்துகொண்டு அடுத்த அலகுகளுக்கான இலவச புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகம்,
SAAMSTECH.

(38557)(16-11-45-38)


## Jayoda ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7132712 முதல் 7145239 வரை சீட்டிழுப்பு இல. 156 திகதி 04-8-2005

வெற்றி எண்கள் 7 0 8 9 1 8 சுப்பர் எண் 04

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,11,69,650/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,11,69,650/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 5,000/- | 5,55,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,091 | 500/- | 5,45,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,913 | 50/- | 5,45,650/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,08,157 | 10/- | 10,81,570/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 1,000/- | 1,08,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,095 | 100/- | 1,09,500/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,823 | 20/- | 2,16,460/- |
| | | மொத்தம் | 47,56,680/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 53,59,280/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 1,14,73,100/-

தொடர் இல. 6201264 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 08 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 7137265-6-00 |
| இரத்தினபுரி | 7136472-9-06 |
| கேகாலை | 7135956-5-41 |
| குருநாகல் | 7142419-4-97 |
| புத்தளம் | 7140017-4-69 |
| திருகோணமலை | 7135155-2-81 |
| கண்டி | 7138516-8-05 |
| மாத்தளை | 7138166-5-35 |


## இன்னுமொரு!.... சூழ்நிலையை மாற்றி நாட்டின் சமாதானத்திற்காக ஜெபம் செய்ய ஒன்று திரள்வோம்!

வெள்ளப்பெருக்கா
சுறாவளியா
சுனாமியா
?

இடம்: அசெம்பிளி ஒவ் கோட்,
14, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: தினமும் மாலை 6மணி முதல் 9 மணி வரை

இரவு ஜெபம் ஓராம் ஆண்டின் நிறைவில் அநேக அற்புத சாட்சிகளுடன் நடைபெறுகின்றது. நீங்களும் கலந்துகொள்ளுங்கள்.
வியாதியா? பிசாசின்பிடியா? வறுமையா? வாழ்வில் தோல்வியா? சமாதானமில்லையா? தீராத நோயா?
யாவருக்காகவும் விசேட பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

"என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி என் முகத்தைத் தேடித் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால்;
நான் (தேவன் இயேசு) அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன். (நாளாகமம்: 7:14)

# பொதுமக்களின் சீற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளம்பரிதி மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் நீண்டகாலமாகவே அடிப்படை அரசியல் தீர்வு இன்றி பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் மீது இராணுவத்தினர் மேலும் மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருவதனால் படையினர் மீது தமிழ் மக்கள் வெறுப்புணர்ச்சி கொண்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் இணுவில் சம்பவம் போன்ற அசம்பாவிதங்களால் மக்கள் இயல்பாகவே ஆத்திரமடைந்திருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தைச் சரியான முறையில் அணுகாமல் பொதுமக்கள் மீது தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைப் பிரயோகம் போன்றவற்றை மேற்கொண்டமை பொது மக்களை மேலும் ஆத்திரத்திற்குள்ளாக்கி அவர் களை கொந்தளிக்கச் செய்திருக்கிறது.

மக்களின் நடமாட்டம்மிக்க, அவர்களுக்கு அத்தியாவசியமான சூழல்களில் படையினர் துப்பாக்கிகளுடன் செல்வதும், துப்பாக்கிகளை சுடுநிலையில் வைத்திருப்பதும் எப்போதும் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் . எனவே இந்த நிலை தவிர்க்கப்படவேண்டியதே. பொதுமக்களின் பிரதேசத்தில் ஆயுதங்களுடன் செல்வது சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளபோதும் படையினர் அதனை மீறிச் செயற்பட்டுள்ளனர். இந்நிலையில் இதுபோன்ற அசம்பாவிதங்களையும் யாரும் தடுத்துவிடமுடியாத நிலை ஏற்படலாம்.

ஆகவே, பொதுமக்கள் வாழ்விடங்களில் அச்சுறுத்தும் வகையில் ஆயுதங்களுடன் பிரசன்னமாகுவதை படையினர் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அவ்வாறான நிலையில் மக்கள் கொந்தளித்து கிளர்ந்தெழும் சூழலும் ஏற்படாதிருக்க வாய்ப்புண்டு.

ஆகவே, இதுபோன்ற துயரச் சம்பவங்கள் நடைபெற்ற பின்னர் கவலை தெரிவிப்பதை விடுத்து அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருப்பதை உறுதிசெய்யவேண்டியது படைத்தரப்பின் பொறுப்பாகும். (ஐ-எ-9)

## சட்டம்,ஒழுங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சந்திப்பானது எமது வேண்டுகோளுக்கு இணங்க யுத்தநிறுத்தக் கண் காணிப்புக் குழுவினால் ஒழுங்கு செய்யப் பட்டது.

தற்போதைய பதற்ற நிலைமைகளைத் தணித்து அமைதியை மேம்படுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதில் விரிவாக ஆராயப்பட்டது.

இணுவில் பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலையை பேச்சுக்கள் மூலம் தணிக்க முற்பட்ட பொலீஸ் அதிகாரிக்கு நேர்ந்த கதி மிகவும் கவலையளிக்கிறது. அதேவேளை, தவறுதலாக துப்பாக்கிசுடப்பட்டதில் இளைஞர் உயிரிழந்தமையும் வருத்தம் தரும் சம்பவமாகும்.

இப்படியான சூழ்நிலைகளின்போது பொது மக்கள் சட்டத்தைக் கையில் எடுக்காதிருக்க வேண்டும்.

குற்றமிழைப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது படையினரும் பொலீஸாரும் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்பதில் பொதுமக்கள் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. பொதுமக்கள் ஒத்துழைத்தால் மட்டுமே சட்டத்தையும் ஒழுங்கையும் பேண நாங்கள் பூரண நடவடிக்கை எடுக்க முடியும். - இப்படி மேஜர் சுனில் தென்னக்கோன் மேலும் கூறினார். (ஐ-7-9)

# இரண்டு இராணுவத்தினர் விளக்கமறியலில்!

இணுவிலில் சிகையலங்கரிப்பு நிலையம் ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட ஐந்து இராணுவத்தினரில் இருவரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி மல்லாகம் மாவட்ட நீதிவான் உத்தரவுபிறப்பித்துள்ளார். சுன்னாகம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட ஐந்து இராணுவத்தினரில், சம்பவம் இடம்பெற்ற சமயம் ஆயுதத்துடன் கடமையில் ஈடுபட்டிருந்த இரண்டு இராணுவத்தினர் நேற்று மாலை மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இதன்போது குறிப்பிட்ட இரண்டு இராணுவத்தினரையும் இருவாரங்களுக்குத் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-7)

# ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தபோதும் நண்பகலுடன் குடாநாடு முடங்கியது. கடைகள் மற்றும் அரச அலுவலகங்கள், வங்கிகள், பாடசாலைகள் எல்லாம் மூடப்பட்டுக்கிடந்தன.

படையினர் மோட்டார் சைக்கிள் களில் சென்று, ஒற்றைக் கதவில் திறந்திருந்த சில கடைகளையும் மூடுமாறு உத்தரவிட்டனர்.

ஆள்நடமாட்டங்களைத் தடுக்கும் நோக்கில் காவலரண் பகுதிகள் ஊடாக மக்கள் பயணிக்க படையினர் அனுமதிக்கவில்லை.

வடமராட்சியில் பொலீஸார் வாகனங்களில் சென்றுகடைகளைப் பூட்டுமாறு அறிவுறுத்தல் விடுத்தனர்.

ஏ-9 வீதியில் மிருசுவிலிற்கு அப்பால் செல்ல மக்களை படையினர் அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக முகமாலை ஊடான போக்குவரத்துகள் நேற்றுக் காலை இடம்பெறவில்லை.

நண்பகல் 12.30மணியுடன் ஊரடங்கு நீக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் முகமாலை ஊடான போக்குவரத்து படையினரால் அனுமதிக்கப்பட்டது. மாலையில் ஆங்காங்கே சில கடைகள் திறக்கப்பட்டன. ஒரு சில பஸ்கள் ஓடின. எனினும், இயல்பு நிலை முழுமையாகத் திரும்பவில்லை.

நண்பகலில் ஊரடங்கு தளர்த்தப்பட்டது. எனினும், நேற்று இரவு 10 மணிமுதல் இன்று அதிகாலை 5.30 மணிவரை அது மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.(எ-க-3-11-70-173-175-86-72)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீசப்பட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என புலிகள் தெரிவித்தனர்.

சம்பவ் இடத்துக்கு விஜயம்செய்த கண் காணிப்புக் குழு அதிகாரிகள் சேத விவரங்களைப் பார்வையிட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர். புலிகளின் இதே அரசியல்துறைப் பணிமனைமீது ஏற்கனவே மூன்று தடவைகள் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருகின்றனர் என களுவாஞ்சிக்குடிப் பொலீஸார் தெரிவித்தனர். (எ-க-7-ரி)


## அறிவித்தல்

**சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் யாழ்.மாவட்டம்**

04.08.2005 அன்று இணுவில் பகுதியில் சிகை அலங்கரிப்பு நிலையதில் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்த எமது ஒன்றிய அங்கத்தவர் ஜெயசீலன் சாந்தறூபன் அவருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் யாழ்.மாவட்ட அனைத்துக் கிளைச்சங்க, சிகை அலங்கரிப்பு நிலையங்களும் இன்று (06.08.2005) சனிக்கிழமை சகல நிலையங்களும் மூடி 07.08.2005 அன்று நடைபெறும் அவரின் இறுதிக் கிரியைகளில் புதிய நேரம் 2 மணியளவில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(38570)(11-45-38) ரகு - தலைவர்


## யாழ்.பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது.

பொலீஸ் நிலையத்திற்குச் செல்லும் சகல வீதிகளும் முட்கம்பிச் சுருள்கள் போட்டு வீதிகள் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் பொலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது. (த-7)

## பதற்ற நிலையைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் உணர்வுபூர்வமானதும், கொந்தளிப்பு மிகுந்ததுமான தற்போதைய பதற்ற நிலையைத் தணிப்பதாயின் இதில் சம்பந்தப்பட்ட சகலதரப்பினரும் பொறுமையையும் நிதானத்தையும் கடைப்பிடிக்கவேண்டும் என்று கண்காணிப்புக் குழுவின் சார்பில் கருத்து முன்வைக்கப்பட்டது.

பொதுமக்கள் கூடும் இடங்களில், அவர்களை அச்சுறுத்தும் வகையிலும் அவர்களுக்கு ஆபத்தை உண்டுபண்ணும் விதத்திலும் துப்பாக்கிகளுடன் பிரசன்னமாவதை படையினர் தவிர்த்துக்கொள்ளவேண்டும். அசம்பாவித சம்பவங்கள் நடைபெறும் இடங்களில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் படையினர் மற்றும் பொலீஸாரை குவிப்பதையும் தவிர்த்துக்கொள்வதுடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரசன்னத்துடன் விடயங்களை அணுகுவதே உகந்த வழி என்று தமிழ்த்தேசிய கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இச்சந்திப்பில் படையினர் தரப்பில் மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், கேணல் அத்துல, மேஜர் துமிந்த ஆகியோரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, சுனாமி அனர்த்தச் செயலணியின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் பாலையா ஆகியோரும் யுத்த நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகப் பிரதித் தலைமை அதிகாரி ரொனி மைக்வோல்ட்(Ronny Myhwold) மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, என்.ரவிராஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார். (ஐ-எ-9-7)


## பாண் விலை மாற்றம்

மாவின் விலையும் பாண் தயாரிப்பதற்குத் தேவையான சில உப பொருள்களின் விலை அதிகரிப்பினால் இன்று (06.08.2005) சனிக்கிழமையில் இருந்து ஒரு பாணின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூபா 21 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

யாழ்.மா.பே.உ. சங்கம்

(சி-44435)(11-45-38)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னுத்துரை செல்வநாயகி



அரியாலை மேற்கைச் சேர்ந்த பொன்னுத்துரை செல்வநாயகி அவர்கள் 05.08.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் செ.பொன்னுத்துரை (ஓகன் மாஸ்டர்) அவர்களின் அன்பு மனைவியும் கிருஷ்ண குமார் பிரேமலதாவின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2005) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நல்லூர் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*186, ஆசீர்வாதப்பர் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
செ.பொன்னுத்துரை (கணவன்)

(38567)(11-45-38)

### சவரிமுத்து விக்ரர் வீலிக்ஸ்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும், 15/8, காக்கைதீவு, மட்டக்குளியை வதிவிடமாகவும் கொண்ட சவரிமுத்து விக்ரர் வீலிக்ஸ் நேற்று (05.08.2005) வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து - எலிசபேத்தம்மாவின் அன்பு மகனும் திருமதி யோசவின் பவளத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் விக்ரர் டன்ஸ்ரனின் (காகில்ஸ் லிமிட்டெட்) அருமைத் தகப்பனாரும் அன்ரனி குணம், மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.08.2005) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நல்லடக்கத்துக்காக மாதம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லாயன் வீதி,*
*சில்லாலை.*

தகவல்:
ச.மரியநாயகம் (சகோதரன்)

(38563)(11-45-38)

### பொன்னையா கணபதிப்பிள்ளை (M.P.K.)

*(முன்னாள் பிரபல வர்த்தகர் - மன்னார்)*

இணுவிலைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கணபதிப்பிள்ளை (M.P.K.) அவர்கள் நேற்று 05.08.2005 காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2005) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15/6, தேவாலய ஒழுங்கை,*
*ஓட்டுமடம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(38571)(11-45-38)

## மரண அறிவித்தல்கள்

### கந்தர் தம்பிஐயா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் தம்பிஐயா அவர்கள் நேற்று (05.08.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தர் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் ஜெகசோதியின் தந்தையாரும் இராசரத்தினத்தின் மாமனாரும் தயாபரன் சுபானி, காண்டீபன், கருணாகரன், குணசீலன், தர்சன், லவகாந், கோபிநாத், செந்தூர்காந் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2005) சனிக்கிழமை பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை வீதி,*
*பண்டத்தரிப்பு.*

தகவல்:
இராசரத்தினம்
(மருமகன்).

(38560)(11-45-38)

### திருமதி செல்வரட்ணம் கண்மணி



கோண்டாவில் மேற்கு, கே.கே.எஸ். வீதியைச் சேர்ந்த திருமதி செல்வரட்ணம் கண்மணி அவர்கள் 03.08.2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
பொ.செல்வரட்ணம் (கணவர்).

(38561)(11-45-38)

### நல்லதம்பி பொன்னுத்துரை (S.P)

தாவடியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி பொன்னுத்துரை அவர்கள் நேற்று 05.08.2005 காலமானார்.

அன்னார் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2005) பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில்லேன், மல்லாகம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(சி-44437)(11-45-38)


வருகிற ஞாயிறு தான் !
:: ::: ::: ::: ::: வேடிக்கை

COLLEGE OF ENGLISH பிறவுன் வீதி, யாழ்.
SPOKEN ENGLISH / GRAMMAR
By: T.THANENDRAN.S.L.T.S.2 II
O/L
English Paper Class
Sat., Sun. 5.30
Sat., Sun. 4.30 (38552)(11-45-38)

SAAMSTECH இன் இலவச ஆங்கில டிப்ளோமாவிற்கான நேரடி வகுப்பு அறிவித்தல்
பக்கம் 7 இல் (38558)(11-45-38)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.